# நடராசா வள்ளியம்மாள் கல்வி ஊக்குவிப்பு நிதியம்

## Nadarasa Valliammal Educational Promotional Fund

Athikovilady　　　　　　　　　　　　　　　　　　Valvettithurai

ஆதிகோவிலடி　　　　　　　　　　　　　　　　　　வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியை பிறப்பிடமாகக் கொண்ட நான் எங்கள் பிதாமகன் வல்லிபுரம் முருகுப்பிள்ளை ஆகிய சிவலை முருகர் பரம்பரையில் பிறந்தேன்.

இக் குக்கிராமத்தில் வசித்து வந்தவரடகளுள் நூற்றுக்கு 99 வீதமானவர்கள் மீன்பிடித்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டவர்களே.இதனால் பதின்ம வயதுடைய அதாவது 11வது வயதிற்கு வந்த ஆண்பிள்ளைகள் பெற்றோருக்கு நிதி ஆதாரமளிப்பதற்காக கடற்தொழிலையே மேற்கொண்டு வந்தனர்.இதற்குஅங்கு வாழ்ந்த அங்கு பெற்றோர்களுடைய கல்வியின் மகத்துவம் பற்றி அறியாமையும், வருமானத்தை மட்டும் அதிகரிக்க செய்ய வேண்டும் என்ற அவாவும் எமது முன்னோடிகள் கல்வியில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்காமையும், அரச உத்தியோகங்களில் இணையாதவர்களாக இருந்தமையாலும் எனப் பல காரணங்களைக் கூறலாம்.

இச் சூழ்நிலையில் எனது அன்னையாகிய நடராசா வள்ளியம்மாள் இவற்றுக்கு எல்லாம் விதிவிலக்காக தனது பிள்ளைகளை கல்வியில் நாட்டம் கொள்ள செய்வதில் ஆர்வம் காட்டினார்.எமது குடும்பத்தின் மூத்த பிள்ளையாகவும் ஒரேயொரு பெண் பிள்ளையாகவும் பிறந்தவர் திருமதி தனபாலசிங்கம் தங்கேஸ்வரி ஆவார்.இவர் கடந்த 26.02.2019 அன்று சிவபதம் எய்திவிட்டார்.இவர் மூத்த பிள்ளை என்ற வகையில் தனக்கு பின்வந்த சகோதரர்களை வளர்க்க வேண்டிய கடப்பாடு இருந்தமையாலும், தயாராகிய எனது அன்னைக்கு உதவி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தமையாலும் தனது கல்வியை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது.

இவருக்கு அடுத்ததாக மூத்த ஆண் பிள்ளையாக எனது சகோதரர் நடராசா குணரட்ணம் என்பவரும் தனது இளைய சகோதரர்களையும் வளர்க்க வேண்டும் கல்வியூட்ட வேண்டும் பெற்றோருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதனால் தனது கல்வியை சிவகுரு பாடசாலையில் இருந்து நிறுத்திக் கொண்டு மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

இவருக்கு அடுத்ததாக பிறந்த தனரட்ணம் எனும் எனது அண்ணா பதின்மூன்று வயதிலேயே விபத்துக்குள்ளாகி மரணமாகி விட்டார்.இவருக்கு அடுத்ததாக பிறந்தவர் தற்சமயம் டென்மார்க்கில் வசிக்கும் நடராஜா ராஜரட்ணம் ஆவார்.என்னுடைய அன்னையார் இவருக்கு கல்வி ஊட்டிய போதும் இவர் க.பொ.த சாதாரணதர பரீட்சையுடன் தனது படிப்பை நிறுத்திக் கொண்டார்.

இவருக்கு அடுத்ததாக பிறந்தவர்தான் நான் எனது அன்னையார் என்னுடைய தந்தையாரின் கெடுபிடிகளுக்கு மேலும் சொல்லப் போயின் அவரது தாக்குதல்களுக்கும் எதிராகப் போராடி என்னையும்இ எனக்கு பின் பிறந்த இரு சகோதரர்களுக்கும் கல்வியூட்டுவதில் முனைப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வந்தார்.இதனால் நான் கல்வியில் க.பொ.த உயர்தர வகுப்பு வரை படித்து சிறந்த பெறுபேற்றினை பெற்றிருந்தேன்.இருந்த போதிலும் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு போகுமுன் எனக்குரிய சரியான வழிகாட்டுதல்கள் இல்லாமையினால் எனக்குள்ளேயே குழப்பம் ஏற்பட்டு க.பொ.த சாதாரண தரத்தில் Arts,Science,Commerce, என்று மூன்று துறைகளிலும் 21 பாடங்களில் பெறுபேறுகளைப் பெற்று உயர்தரத்தில் யு.்.டு படிப்பிற்கு தகுதி பெற்றிருந்தேன்.க.பொ.த உயர்தரத்தில் கலைப்பகுதியில் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு

நண்பன் (Dental Sergent V.Palaivel.uk) ‘‘ஏன் இலை பச்சையாக இருக்கிறது’’என்று ஒரு கேள்வியை கேட்டு நீ முடிந்தால் A/L Science வகுப்பிற்கு வந்து பார் என்று சவால் விடுத்தமையால் எனது கல்வியை இடைநிறுத்தி விட்டேன்.

எது எப்படியாயினும் எனது குடும்ப வறுமை காரணமாக நான் அரச உத்தயோகத்தை நாடிச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.மூன்று கற்கை நெறிகளும் சிறப்பு சித்திகள் எய்தியிருந்தமையால் மூன்று தொழில் வாய்ப்புக்கள் எனக்கு கிடைத்தன அவையாவன:

Assistant Post Master

Assistant sheriff(கச்சேரியில் உதவி சிறாப்பர் வேலை)

இலங்கை வங்கி உதவிக் காசாளர் வேலை

இவற்றுள் என்னுடைய சாதாரண ஆசிரியரான திரு.சு.ராசநாயகம் (கிழக்குத்தெரு வல்வெட்டித்துறை) அவருடைய ஆலோசனைப்படி இலங்கை வங்கியில் காசாளராக 1970 இல் இணைந்து கொண்டேன்.இலங்கை வங்கியில் 40 வருடங்கள் வேலையாற்றி 47 வயதில் வெளிவாரிப்பட்டதாரியாகி அத்துடன் Dip in Public Administration எனும் பட்டப் பின் படிப்பைக் கற்றதுடன் வங்கியில் A.I.V எனும் பட்டத்தினையும் F.I.B எனும் பட்டத்தினையும் யாழ் மாவட்டத்தில் முதல் முறையாக பெற்று 2010ம் ஆண்டில் இளைப்பாறி இன்றுவரை எனது பிறந்த மண்ணான ஆதிகோவிலடிக்கும், வல்வெட்டித்துறைக்கும் என்னால் முடிந்த சமூக சேவைகளை ஆற்றி வருகின்றேன்.

இதன் ஓர் அங்கமாகவும், என்னுடைய அன்னையின் நினைவாகவும் பின்தங்கிய நிலையிலுள்ள எனது சொந்தக்கிராமமாகிய ஆதிகோவிலடி மாணவர்களை கல்வியில் ஊக்கப்படுத்தவும், அங்குள்ள பெற்றோர்களுக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கவும் ஒரு ஊக்கியாக என்னுடைய அன்னையின் பெயரில் ஒரு நிதியத்தை உருவாக்கி அதன் மூலம் கல்வியை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றேன்.அதற்காக உருவாக்கப்பட்டதுதான் மேற்கூறிய நடராசா வள்ளியம்மாள் கல்வி ஊக்குவிப்பு நிதியம் எனும் அமைப்பாகும்.

இதன் அமைப்பு 2016ம் ஆண்டிலிருந்து தனது பணியை ஆற்றி வருகின்றது.இதன் முக்கிய நிகழ்வாகவும்இஆதிகோவிலடி மண் பெருமைப்படக்கூடிய விதமாகவும் செல்வன் சிவரூபனின் சாதனையான யாழ்மாவட்டத்திலேயே தரம் 5ற்குரிய புலமைப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றமை ஒரு சரித்திர நிகழ்வாக கொண்டாடப்பட்டது.இதன் தொடர்ச்சியாகவே பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வந்தன.